## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 01.08.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள் :**

பொருள் : நீங்கள் என்னை நினைவு கூறுங்கள். நானும் உங்களை நினைவு கூருவேன். எனக்கு நன்றி செலுத்துங்கள். நன்றி கெட்டவராகி விடாதீர்கள். (2:153)

அல்லாஹ்வின் அருளால் கடந்த ஞாயிறன்று U.K. ஆண்டு மாநாடு அல்லாஹ்வின் அருள்களின் காட்சிகளை நமக்குக் காட்டியவாறு முடிவுற்றது. அல்ஹம்துலில்லாஹ்.

நான் ஏற்கனவே கூறியிருந்தபடி U.K. ஆண்டு மாநாட்டிற்கு தானாகவே ஒரு தலைமையக அந்தஸ்து கிடைத்து விட்டது. உலகிலுள்ள ஒவ்வொரு அஹ்மதியும் இந்த மாநாட்டிற்காக காத்திருக்கின்றார்கள். இதற்காக தயாரிப்பில் ஈடுபடுகின்றார்கள். எவர்களுக்கு இங்கு வந்து நேரடியாக மாநாட்டில் கலந்து கொள்ளும் வசதி இருக்கின்றதோ அவர்கள் நேரடியாக இங்கு வருவதற்கு முயற்சி செய்கின்றார்கள். எதுவரையென்றால் ஏழைகளும் பணம் சேர்த்து வைத்து அதை செலவு செய்து இந்த மாநாட்டில் கலந்து கொள்ள முயற்சி செய்கின்றார்கள். மாநாட்டில் மட்டும் கலந்து கொண்டு விட்டு திரும்பி சென்று விடுகின்றனர். இந்த வருடமும் பல மக்கள் என்னை சந்தித்தார்கள். அவர்கள் மாநாட்டிற்காக மட்டும்தான் இங்கு வந்தார்கள். மாநாடு முடிந்த மறுநாளேஅவர்கள் திரும்பி சென்று விட்டார்கள். சிலர் இந்த ஜுமுஆ வரை இங்கு தங்கியுள்ளார்கள். அவர்களில் பெரும்பாலாருக்கு நாளை அல்லது நாளை மறுநாள் Flight-ல் செல்ல வேண்டியதுள்ளது. சிலரைப் பற்றி எனக்குத் தெரியும். அவர்களுக்கு இங்கு செலவு செய்து வரும் அளவுக்கு பொருளாதார வசதி இல்லை. குறிப்பாக பாகிஸ்தானிலிருந்து வருபவர்களுக்கு இந்த அளவு செலவு செய்து வருவதற்கான வசதி இல்லை. ஆனால், மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்துள்ள துஆக்களைப் பெற்றுக் கொள்வதற்கும் காலத்தின் கலீஃபாவை சந்திப்பதற்கும் தான் இவர்கள் வருகின்றார்கள். இந்த வருடம் பல்வேறு நாடுகளில் அஹ்மதிகள் பெரும் எண்ணிக்கையில் மாநாட்டிற்கு வருவதற்காக விசா கேட்டு விண்ணப்பம் கொடுத்திருந்தார்கள். ஆனால், ஒவ்வொரு இடத்திலும் எந்த அளவு அதிக எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டிருந்ததோ அதற்கெதிரில் மிக குறைவாகவே விசா கிடைத்திருக்கின்றது. எவர்களது விண்ணப்பங்கள் ரத்து செய்யப்பட்டு இருந்ததோ அவர்கள் மிகவும் உணர்ச்சிப்பூர்வமாக தாங்கள் வரமுடியாமல் ஆகிவிட்டத்தை வெளிப்படுத்துகிறார்கள். இந்த உண்மையான உணர்ச்சிப்பூர்வமான நிலையானது சிலரது கடிதங்களில் எனக்கு தெரிகிறது. வெளிப்படையாக அவர்களுக்கு எந்த வசதியும் இல்லாமல் இருந்தும் இந்த வருடம் இல்லாவிட்டாலும் அடுத்த வருடம் வருவதற்கு அல்லாஹ் ஏதாவது வழியைத் திறப்பான் என்று அவர்கள் நம்புகின்றார்கள். அவர்கள் எந்த அளவு உணர்ச்சிப்பூர்வமாக மாநாட்டிற்கு வர முடியாத தங்களது நிலையையும் கிலாஃபத்திடமிருந்து மிகத் தொலைவில் இருக்கும் தங்களது நிலைமையையும் வெளிப்படுத்தியுள்ளனர் என்றால் அதை எடுத்து கூறுவது ஒருபுறமிருக்கட்டும். அப்படிப்பட்ட கடிதங்களை படிக்கும்போதே உணர்வின் தாக்கத்திற்கு ஆளாக வேண்டியது வருகின்றது. விரைவில் இந்த தூரமும் நெருக்கமாக மாறுவதற்கு இறைவன் ஏதாவது ஏற்பாட்டை செய்வானாக. இங்கு வருவதற்கும் காதியானிலுள்ள ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கும் எந்த அளவு முயற்சி செய்தாலும் ஒரு சில ஆயிரம் பேர்களைத் தவிர அதிகமாக மக்கள் மாநாட்டில் கலந்து கொள்ள முடியாது. ஆனால் பாகிஸ்தானில் லட்சக்கணக்கில் மக்கள் கூடுகின்ற மாநாடுகள் நடந்திருக்கின்றது. ரப்வா மிகச் சிறிய நகரமாகும். அங்கு மாநாட்டின் போது எந்த அளவு கூட்டம் அதிகமாக இருக்குமென்றால் தெருக்களில் செல்வதே கடினமானதாக இருக்கும். அதுவும் பொலிவைத் தரக்கூடிய நாட்களாகவும் வசந்த காலமாகவும் இருந்தது. ஒரு வியக்கத்தக்க ஆன்மீக சூழல் இருந்தது. இங்குள்ள மாநாடுகள் ரப்வாவின் மாநாடுகளின் நினைவைப் புதிப்பிக்கின்றது.

ரப்வாவின் பொலிவு மீண்டும் நிலைநாட்டப்படும் அந்த நாட்களும் கண்டிப்பாக வரும். அப்போது பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளும் மகிமையுடன் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துகின்ற காட்சியை நாம் பார்ப்போம். மக்கா வெற்றியின்போது ஒட்டகத்தின் இருக்கையில் சஜ்தா செய்தவாறு நமது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைநாட்டிய அந்த உயர்வான முன்மாதிரி அப்போது அவர்களின் கண் முன்னால் இருக்கும். இந்த நன்றி செலுத்தும் சஜ்தாவை செய்வதற்கு நாம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றியவாறு உங்களது வாழ்வின் ஒவ்வொரு நாளையும் சஜ்தா மூலம் அழகூட்ட வேண்டும். இந்த அளவு தூரத்தில் நாம் இருந்தும் எல்லா விதமான அடக்குமுறைகளும் நம்மீது இருக்கும் போதிலும் அல்லாஹ் நம்மீது அருள் செய்தவாறு MTA மூலமாக தொடர்பு கொள்ளும் வாய்ப்பை வழங்கியுள்ளான். இதன் மூலமாக பாகிஸ்தானிலுள்ளவர்களும் தங்களது நாடுகளில் சுதந்திரமாக மாநாடுகள் நடத்த முடியாதவர்களும் இந்த காட்சிகளைக் கண்டு ஓரளவு தங்கள் தாகத்தை தணித்து கொள்கின்றார்கள். மாநாட்டை நடத்த முடியாத பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகள் தொலைக்காட்சித் திரையில் மாநாட்டின் காட்சிகளைப் பார்க்கின்றார்கள். துஆக்களில் கலந்து கொள்கின்றார்கள். சிலர் முறைப்படி மாநாட்டு சூழலையே உருவாக்கி தங்களது வீடுகளில் லங்கர் கானா முறைப்படியே உருளைக்கிழங்கு, இறைச்சி, பருப்பு ஆகியவற்றை சமைத்து மாநாட்டைப் பார்க்க வந்துள்ள விருந்தினர்களுக்கு வழங்கி தங்களது உள்ளத்திலுள்ள ஆசைகளை நிறைவேற்றிக் கொள்கின்றார்கள். ஒருபுறம் இருக்கும் அவர்களது ஆசை இவ்வாறு பூர்த்தியாகி விடுகின்றது. அவர்கள் நேரடியாக மாநாட்டில் வந்து அமராவிட்டாலும் ஓரளவு அவர்களது ஆசை நிறைவேறி விடுகின்றது. ஆனால் நான் அவர்களைப் பார்க்க வேண்டும் என்ற எனது ஆசை Screen –னிலுள்ள கண்கள் மூலம் நிறைவேற முடியாது. ஆனால் அல்லாஹ்வின் அருளால் எனது கற்பனை கண்களால் நானும் அந்த காட்சியைப் பார்க்கின்றேன். அந்த மாநாடுகள் பற்றி விளக்கமாக கடிதங்களில் குறிப்பிடப்படும் போது அந்த காட்சிகளை என்னால் பார்க்க முடிகின்றது.

உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டைச் சார்ந்துள்ளஅஹ்மதிகளுக்கும் மாநாடுகளில் MTA மூலமாக கலந்து கொள்வதற்கான வாய்ப்பை வழங்கியிருப்பது அல்லாஹ்வின் மாபெரும் அருளாகும். இதற்கு நன்றி செலுத்தும் முகமாக பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகள் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தியவாறு மேலும் அல்லாஹ்வின் முன்னிலையில் குனிய வேண்டும். அல்லாஹ் எல்லாருக்கும் இதற்கான தவ்ஃபீகை வழங்குவானாக.

அல்லாஹ்வின் அருளால் U.K ஜல்ஸா மிகவும் வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கின்றது. மாநாட்டின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்து உலகிலுள்ள எல்லா நாடுகளிலிருந்தும் FAX, கடிதங்கள் ஆகியவற்றின் ஒரு வரிசையே இயங்கிக் கொண்டே இருக்கின்றது. ஆனால் இந்த வருட மாநாட்டிற்கு ஒரு குறிப்பான முக்கியத்துவம் இருக்கின்றது. எனக்கு தினமும் வரும் கடிதங்களில் மாநாட்டிற்கு வாழ்த்து தெரிவித்து வரும் கடிதங்களின் தொடர் கடந்த ஏப்ரல் மாதமே ஆரம்பம் ஆகி விட்டது. அப்போதுதான் கானா மற்றும் நைஜீரியாவின் மாநாடுகள் நடைபெற்றன. கிலாஃபத் ஜுப்லியின் வருடமாக இருப்பதால் எல்லா நாடுகளிலும் குறிப்பாக நான் செல்ல முடியாத நாடான பாகிஸ்தானிலும் இருந்து வரும் வாழ்த்து தெரிவிக்கும் கடிதங்கள் மிகவும் உணர்ச்சிப் பூர்வமாக இருக்கின்றன.

இப்போது நான் U.K ஆண்டு மாநாடு தொடர்பாக மக்களது கருத்துக்கள், ஒரு அஹ்மதி இந்த அருளுக்கு எப்படி நன்றி செலுத்துபவராக இருக்க வேண்டும் என்பதைப் பற்றி சுருக்கமாக கூறுவேன்.

நான் மாநாட்டின் இறுதிநாளில் கூறியதுபோன்றே இந்த வருடம் இங்கு நடைபெற்ற மாநாட்டில் அல்லாஹ்வின் அருளால் 40,000 க்கும் அதிகமானோர் கலந்து கொண்டார்கள். இதுவரை நடைபெற்ற மாநாடுகளில் கானாவில் நடைபெற்ற மாநாடுதான் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொண்ட மாநாடாக இருந்தாலும் அதில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமாக மக்கள் வந்திருந்தாலும் எத்தனை நாட்டின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள் என்பதைப் பார்க்கும் போது U.K –ன் ஆண்டு மாநாட்டில் மட்டும்தான் 85 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர். இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் இத்தனை நாட்டுப்

பிரதிநிதிகள் கலந்து கொண்டது எதிரிகளுக்கு நிச்சயமாக ஒரு மிகப்பெரும் அடியாகும். ஆனால் நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துபவர்களாக இருக்க வேண்டும். இந்த முறையும் எப்போதும்போல் முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதவர்களும் மாநாட்டில் கலந்து கொண்டு ஜமாஅத் தொடர்பான தங்களது நல்ல கருத்துக்களைக் கூறினார்கள். ஒவ்வொருவரும் மாநாட்டு ஏற்பாடுகளைப் புகழ்ந்து கூறினார்கள். அஹ்மதிகளின் பரிமாற்றத்தைப் பார்த்து சிறந்த தாக்கத்தை அவர்கள் பெற்றுள்ளார்கள். இந்த மாநாடு நம்மீது ஆன்மீக முன்னேற்றத்திற்கும் நமது தர்பிய்யத்திற்கு காரணமாக இருப்பதுடன் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற மாநாடுகளும் இங்கு நடைபெற்ற மாநாடும் நமது தப்லீகிற்குரிய வழியாகவும் ஆகியிருக்கின்றது. இங்கு நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகளின் தரமும் உயர்வான இருந்தது. கருததுச் செறிவுள்ளதாக இருந்தது. அவை எங்களுக்கு புதிய ஒளியை வழங்கியது என்று எல்லாருமே வெளிப்படையாக கூறியிருக்கின்றார்கள். நைஜீரியாவிலிருந்து வந்த ஒரு மிகப்பெரிய Scholar (அறிஞர்) நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி ஏற்கனவே தெரிந்திருந்தாலும் எனது உள்ளத்தில் சில சந்தேகங்கள் இருந்தன. ஆனால், இந்த மாநாட்டை பார்த்த பிறகும் சொற்பொழிவுகளைக் கேட்ட பிறகு இவர்களது செயல்கள் என்ன? என்பதையே நான் பார்க்க விரும்பினேன். ஆனால் நான் இங்கு எவற்றை பார்த்தேனோ அதற்குப் பிறகு உண்மையான இஸ்லாம் உங்களிடம்தான் இருக்கின்றது என்பதை தெரிவிக்காமல் என்னால் இருக்க முடியாது என்று கூறியுள்ளார். பல்கேரியாவிலிருந்து ஒரு குழு வந்திருந்தது. அதிலும் அஹ்மதிகளல்லாத சிலர் இருந்தார்கள். அவர்களும் ஜமாஅத்துடன் வெகு காலமாக தொடர்பு வைத்திருந்தவர்கள் ஆவார்கள். ஜமாஅத்தின் போதனைகள் என்ன? என்பதை பார்க்கவே அவர்கள் வந்துள்ளார்கள். ஜமாஅத்திற்கு எதிர்ப்பு இருந்து வரும் ஒரே ஐரோப்பிய நாடாக பல்கேரியா இருந்து வருகின்றது. இங்கு Muslim Council இருக்கின்றது. முஸ்லிம் அரசாங்கம் இருப்பதால் எதிர்ப்பு இருக்கின்றது. இதனால் ஜமாஅத் Registration செய்யப்படுவதிலும் அங்கு தடை ஏற்பட்டுள்ளது. ஜமாஅத்தைச் சார்ந்திராத இவர்களும் நாங்கள் மாநாட்டை பார்த்தோம். சொற்பொழிவுகளைக் கேட்டோம். மக்களையும் சந்தித்தோம். உண்மையான அசல் இஸ்லாம் இங்குதான் எங்களுக்கு தெரிகிறது என்று கூறியுள்ளார்கள். ஜமாஅத்தைச் சார்ந்திராத பலருக்கும் சில நிமிடங்கள் தங்களது கருத்தைக் கூறுவதற்கு நாம் வாய்ப்பளித்தோம். ஒரு இஸ்லாமிய நாட்டைச் சார்ந்த ஜமாஅத்தைச் சார்ந்திராக ஒரு விருந்தினர் வந்திருந்தார். எங்களுக்கு நேரம் கொடுக்கப்படவில்லை என்பது இவரது முறையீடாக இருந்தது. எனவே, மாநாட்டு அமைப்பாளர்கள் வருங்காலத்தில் இதை கவனத்தில் வைக்க வேண்டும். ஒவ்வொரு நாட்டிற்கும் நேரம் ஒதுக்க முடியவில்லையென்றாலும் குறைந்தபட்சம் ஒவ்வொரு நாட்டிலுள்ள பல பகுதிகளையும் பங்கிட்டு அங்குள்ள நமது ஜமாஅத்திடமிருந்து தகவல் பெற்று அந்த பகுதிகளிலிருந்து வரும் ஜமாஅத்தைச் சாராதவர்களுக்கு பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். மாநாட்டின் எல்லா நிகழ்ச்சிகளிலும் மற்றவர்களிடமிருந்து எனக்கு வந்த ஆட்சேபனைகள் இரண்டாகும். முதல் ஆட்சேபனை எங்களுக்கு நேரம் தரப்படவில்லை என்ற இந்த ஆட்சேபனையாகும். இரண்டாவது ஆட்சேபனை நிகழ்ச்சிகள் சரியான நேரத்தில் ஆரம்பமாகவில்லை என்பதாகும். எனது அறிவின்படி சில சூழ்நிலைகள் காரணமாக ஏதாவது நிகழ்ச்சிகளில் ஒரு சில நிமிடங்கள் தாமதம் ஏற்பட்டாலும் பொதுவாக நிகழ்ச்சிகள் அதற்குரிய நேரத்தில்தான் ஆரம்பமாகியுள்ளது என்றே நான் கருதுகின்றேன். இவ்வாறு ஆட்சேபனை செய்தவர்களிடம் நான் பாருங்கள்! இவ்வளவு விரிவான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எல்லா ஏற்பாடுகளும் தற்காலிகமாகத்தான் செய்யப்பட்டுள்ளது. எனவே, ஏதாவதாரு விஷயத்தில் சிறிய கவனக்குறைவு ஏற்பட்டாலும் அதை நாம் பொருட்படுத்தக் கூடாது என்று நான் கூறினேன். உதாரணமாக, விரிவான ஏற்பாட்டின்கீழ் விருந்தினர்களுக்கு உணவு பரிமாறப்படும்போது சரியான நேரத்தில் அதை கொடுத்து முடிக்க முடியாமல் போய் இருக்கலாம். அல்லது Transport நெரிசல் காரணமாக மக்கள் வந்து சேர்வதில் சிரமங்கள் ஏற்பட்டிருக்கலாம். மக்கள் பல்வேறு இடங்களிலிருந்து வருவதால் அவர்கள் வந்து சேர கால தாமதம் ஆகியிருக்கலாம். சொற்பொழிவாற்றும் விருந்தினர்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட நேரத்தை விட சில நேரங்களில் கொஞ்சம் அதிகமாக பேசி விடுவார்கள். அதனால் ஒவ்வொரு நிகழ்ச்சியும் முன்னே சென்று விடுவதால் காலதாமதம் ஏற்பட்டு விடுகின்றது. அவர்கள் விருந்தினர்களாக இருப்பதால் விருந்தினர்களுக்கு இருக்கும்

தனித்தன்மையை கருத்தில் கொண்டு நாம் அவர்களை தடுக்க முடியாது. இந்த காரணங்களால் நிகழ்ச்சிகள் தாமதமாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் அதை புரிந்து கொண்டு நமது தவிர்க்க முடியாத நிலையை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நம்புகின்றேன். ஆனால், ஆட்சேபனை செய்தவரும் சாமான்யமான நபரல்ல. ஏதாவது ஆட்சேபனையைத் தேடியவராக இருந்தார். அங்கு அமர்ந்திருந்த அனைவரும் மாநாட்டை புகழ்ந்து கூறிக்கொண்டு இருந்ததனால்தான் இவர் இப்படிப்பட்ட ஆட்சேபனை செய்து கொண்டிருந்தார். ஆனால், பொதுவாக மாநாட்டைப் பற்றிய சிறந்த தாக்கம்தான் அனைவரது உள்ளத்திலும் பதிந்திருந்தது. நான் பெரும் பெரும் மாநாடுகளில் கலந்து கொண்டிருக்கின்றேன். அவை குறித்த நேரத்தில் ஆரம்பமாகின. நேரம் சரியாக பேணப்பட்டது என்று ஆட்சேபனை செய்தவர் என்னிடம் கூறினார். நான் அவரிடம் நேரம் பேணப்பட வேண்டும் என்பதை மறுக்கவில்லை. ஆனால் எந்த மாநாடுகளில் நீங்கள் கலந்து கொண்டு விட்டு வந்துள்ளீர்களோ அந்த வெளிநாடுகளில் நடைபெறும் மாநாடுகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அங்கு மாநாடு நடைபெறும் இடத்திலேயே எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கும். மேலும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த மக்களின் இவ்வளவு பெரிய எண்ணிக்கையும் அங்கு இருக்காது. நன்கு படித்தவர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் அங்கு ஒன்றுகூடி இருப்பார்கள். இவ்வாறு அவரிடம் நான் பேசிக் கொண்டேயிருந்தேன். ஜமாஅத்தின் Discipline -ம் கட்டுப்படும் தன்மையும் உண்மையிலேயே மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தது. அது ஈடு இணையற்றது என்பதை அவர் ஏற்றுக் கொண்டார். மேலும் நீங்கள் கலந்த கொண்ட எல்லா நிகழ்ச்சிகளும் ஏறக்குறைய சரியான நேரத்தில் ஆரம்பமாகியது என்று அவர் கூறினார். நீங்கள் கூறிய விஷயங்களும் முற்றிலும் சரியான இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்பவே இருந்தது. அவை மிகச் சிறந்த விஷயங்களாகும் என்று கூறினார். நான் அவரிடம் நீங்கள் எங்களது வி-யங்கள் சிறந்தவையாக உள்ளன. மக்களிடம் கட்டுப்படும் தன்மையும் இருக்கின்றது. ஆன்மீக சூழ்நிலை இருக்கின்றது என்றெல்லாம் நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால் இந்த வி-யங்கள் உங்களுக்கும் உங்களது ஆலிம்களுக்கும் போதுமான ஆதாரமாக இருக்க வேண்டும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைமையும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நபர்களும் நல்லவர்கள் என்ற ஒரு ஆதாரம் போதுமானதாகும். இந்த தலைமை கிலாஃபத்தின் காரணமாகத்தான் ஜமாஅத்திற்கு கிடைத்திருக்கின்றது. இதன் காரணமாகவே ஜமாஅத்திலுள்ளவர்களிடம் கட்டுப்படுகின்ற தன்மை இருக்கின்றது. நீங்களே இதை ஏற்றுக் கொண்டிருப்பதால் இந்த தூதுச் செய்தியை நீங்கள் ஜமாஅத்திற்கு எதிராக கூச்சலிடுகின்ற உங்களது ஆலிம்களுக்கு எட்ட வையுங்கள் என்று நான் அவரிடம் கூறினேன். அவர்களுக்கு இதை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. ஜமாஅத்திடம் கிலாஃபத் உள்ளது. அவர்களிடம் அது இல்லை. அதன் காரணமாக அவர்கள் முயற்சி செய்து உருவாக்க விரும்புகின்ற அந்த ஒற்றுமை அவர்களிடம் ஏற்பட முடியாது.

பல ஆட்சேபனைகளை இவர்கள் செய்தாலும் என்னைப் பற்றி நேரடியாக இவர்கள் எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை. இதில் என்னுடைய பெருமை எதுவுமேயில்லை. மாறாக, அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப கிலாஃபத்தின் திகிலை இவர்களது உள்ளங்களில் நிலைநாட்ட வேண்டியதுள்ளது. சிலர் தங்களது நாவுகளால் என்னைப் பற்றியும் எதுவும் கூற முடியும். அவ்வாறு இதுவரை அல்லாஹ்வின் அருளால் யாரும் எதுவும் கூறவில்லை. ஆனால் எவர்களிடம் சிறிதளவு கண்ணியமாக நடக்கும் தன்மை இருக்கின்றதோ அவர்கள் ஆட்சேபனைளைச் செய்தாலும் மிகுந்த முன்னெச்சரிக்கையுடன்தான் ஆட்சேபனைகள் செய்கின்றார்கள். நாம் சிறந்ததை எப்போதும் தேட வேண்டும். அவ்வாறு நாம் தேடவும் செய்கின்றோம் என்பதற்காகவே நான் இந்த ஆட்சேபனைகளைப் பற்றி குறிப்பிட்டேன். எனவே நேரத்தை பேணுவது தொடர்பாகவும் விருந்தினர்கள் கருத்தில் கொள்வது தொடர்பாகவும் மேலும் சிறந்த வழிமுறைகளைப் பேண நாம் முயற்சி செய்ய வேண்டும்.

உகாண்டாவினுடைய Assembly -ன் Deputy Speaker வந்திருந்தார். அவர் சொற்பொழிவும் நிகழ்த்தினார். நீங்கள், பெண்கள் மாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவு மிகச் சிறந்த தாக்கத்தை என்னிடம் ஏற்படுத்தி விட்டது. பெண்களின் உரிமைகள் பற்றி மக்கள் சொற்பொழிவு நிகழ்த்துகின்றார்கள். உரிமைகள்

கிடைக்க வேண்டும் என்று மட்டும் கூறுவார்கள். ஆனால், பெண்களுக்கு என்னென்ன உரிமைகள் உண்டு என்பதை அவர்கள் கூறமாட்டார்கள். இதை திருக்குர்ஆனின் போதனைகளின் ஒளியில் எவ்வாறு நீங்கள் கூறியுள்ளீர்களோ அந்த அளவு விளக்கமாக நான் முதன் முறையாக கேட்கின்றேன். இவ்வளவு தெளிவான உரிமைகள் பெண்களுக்கு உண்டு என்பதை இஸ்லாம் கூறியிருப்பது இப்போதுதான் தெரிய வந்தது என்று அவர் என்னிடம் கூறினார். இந்த பெண்மணி கிறிஸ்தவராவார். நான் இஸ்லாத்தின் இந்த போதனைகளால் சிறந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன் என்று அவர் கூறினார்.

இதே போன்ற கருத்தை கஜகிஸ்தானிலிருந்து வந்திருந்த ஒரு அரசியல் தலைவரும் கூறினார். இந்த ஆன்மீக சூழலையும், உங்களது சொற்பொழிவுகளையும் கேட்டு உங்களையெல்லாம் பார்த்த பிறகு முழு உலகமும் உங்கள் ஜமாஅத்தின் கொடியின்கீழ் வந்துவிட வேண்டும் என்று நான் துஆ செய்கின்றேன் என்று அவர் என்னிடம் கூறினார். நமது கொடி எது? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பறக்க வைத்த அந்த கொடியைத்தான் அஹ்மதிகள் பறக்க விடுகின்றனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியுள்ள அந்த போதனைகளைத்தான் நாம் கூறுகின்றோம். முழு உலகத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் கொண்டு வருவதுதான் அஹ்மதியின் பணியாகும். இது நிச்சயமாக ஒரு நாள் நடக்கும். இன்ஷா அல்லாஹ்.

ஒரு அஹ்மதி எனக்கு இவ்வாறு எழுதியுள்ளார். தண்ணீர் கொடுக்கும் duty –ல் இருந்த சிறுவர்கள் எப்போதும் சுற்றி சுற்றி வந்து தண்ணீர் கொடுத்துக் கெண்டே இருந்தார்கள். அவர்களிடமிருந்து தண்ணீரை நாங்கள் பெற்றுக் கொண்டால் அவர்களது முகங்களில் மிகுந்த மகிழ்ச்சி வெளிப்பட்டது. முகங்களில் பிரகாசம் தென்பட்டது. இதே விஷயத்தை ஐவரிகோஸ்ட்டிலிருந்தும் வந்திருந்த ஒரு கிறிஸ்தவ விருந்தினர் என்னிடம் நேரடியாக கூறியிருந்தார். இவர் அங்குள்ள ஒரு அரசியல் தலைவராவார். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர். அவர் என்னிடம் இவ்வாறு கூறினார். சிறுவர்கள் தண்ணீர் அல்லது தேனீர் வழங்கும்போது அதை வாங்கி குடித்தால் அவர்களது முகங்களில் நிம்மதியை என்னால் பார்க்க முடிந்தது. அதை வாங்காமல் இருந்தால் அவர்களது முகங்கள் வாடுவதையும் என்னால் பார்க்க முடிந்தது. இதனால் வேறு வழியில்லாமல் அவர்கள் வருகின்றபோதெல்லாம் ஒவ்வொரு முறையும் எனக்கு தேவை இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்கள் தருவதை நான் வாங்க வேண்டியதிருந்தது. அவர்களிடம் இருப்பதை நாம் பெற்றுக் கொள்ளும்போது அவர்களது முகங்கள் மலர்ந்தன. அவர்களது உள்ளங்களிலிருந்து மகிழ்ச்சி பொங்கி வழிவது போன்ற நிலை இருந்தது என்று அவர் என்னிடம் கூறினார்.

உலகம் சில விஷயங்களை மிகைப்படுத்திக் கூறலாம். ஆனால், மாநாட்டில் குறிப்பாக duty கொடுக்கின்ற அஹ்மதிகளில் பெரியவர் முதல் சிறியவர் வரை அதன் ஆன்மாவைப் புரிந்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதன் மூலமாக அவர்களது உள்ளத்தின் ஆசை நிறைவேறுகிறது. அல்லாஹ்வும் அவனது தூதரும் இட்ட கட்டளைக்கு ஏற்ப அவர்கள் அந்த தொண்டினை செய்கின்றார்கள்.

எவர்களது மடிகளிலிருந்து இத்தகைய சிறுவர்களும், சிறுமிகளும் வந்துள்ளார்களோ அந்த தாய்மார்கள் அருளுக்குரிய வாழ்த்துக்குத் தகுதி பெற்றவர்களாவார்கள்.

ஒரு விருந்தாளி கட்டுப்படும் தன்மைக்கும் Discipline –ற்கும் ஒரு உதாரணத்தை எடுத்துக் கூறினார். ஒரு சமயத்தில் முழக்கங்கள் அதிகமாக கூறப்பட்ட சமயத்தில் ஒவ்வொருவரும் மிகுந்த உணர்வுடன காணப்பட்ட அந்த நேரத்தில் நீங்கள் அமைதியாக இருங்கள் என்று கூறியதும் ஒரு நொடிப்பொழுதில் எல்லா இடமும் நிசப்தத்தில் ஆழ்ந்து விட்டது. இப்படிப்பட்ட காட்சியை இதற்கு முன் நான் கண்டதில்லை; கேட்டதுமில்லை என்று அந்த விருந்தினர் என்னிடம் கூறினார். இந்த காட்சியை இன்று நீங்கள் எங்கும் காணவும் முடியாது. கேட்கவும் முடியாது. ஏனென்றால், இன்று முஹம்மதிய மஸீஹைத் தவிர வேறு எவருடனும் அல்லாஹ்வின் உதவிகள் இருக்கும் என்ற வாக்குறுதியை அல்லாஹ் வழங்கவில்லை. உள்ளங்களின் ஆதிக்கம் அல்லாஹ்வின்

கைகளில் இருக்கின்றது. அவனால்தான் உள்ளங்களில் கட்டுப்படும் தன்மையை உருவாக்க முடியும். அவ்வாறு அவன் உருவாக்கி விட்டான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த ஜமாஅத்தில் கலப்பற்ற மனத்தூய்மையும் அன்பும் பெருமளவில் வளர்ச்சி அடைந்திருப்பதை நான் பார்க்கின்றேன். சில நேரங்களில் ஜமாஅத்தின் மனத்தூய்மை, அன்பு, ஈமானின் உணர்வு ஆகியவற்றைப் பார்த்து நமக்கே வியப்பு ஏற்படுகின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

கவனமாகப் பார்க்கும்பேது நமது ஜமாஅத்திலுள்ள முன்னேற்றமும் மாற்றமும் இந்த காலத்தில் வேறு எவரிடமும் இல்லை. இந்த மக்களின் தூய மாற்றம் என்னை வியப்பில் ஆழ்த்துகிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள:**

இந்த சமயத்தில் அல்லாஹ் ஒரு உண்மையாளரை அனுப்பி வைத்து அல்லாஹ்விடம் அன்பு கொள்கின்ற ஒரு ஜமாஅத்தை தயார் செயய விரும்பியுள்ளான்.

மற்றவர்களும் இந்த ஜமாஅத் உண்மையாளர்களின் ஜமாஅத் என்பதை வெளிப்படையாக கூறாமல் இருக்க முடியாமல் போனது நமது நற்பாக்கியமாகும்.

இந்த முறை மாநாட்டில் மேலும் பொலிவை ஏற்படுத்துவதற்கும், மீடியாக்களில் விளம்பரமாவதற்கும், ஜெர்மனியிலிருந்து சைக்கிளில் பயணம் செய்து வந்தவர்கள் காரணமாக இருந்தார்கள். 100 குத்தாம்கள் சைக்கிளில் பயணம் செய்து இங்கு வந்தார்கள். இதுவும் மனத்தூய்மை, பற்று ஆகியவற்றின் ஒரு வெளிப்பாடாகும். இத்தகைய சமுதாயத்தில் வாழும் இளைஞர்கள் மத்தியிலும் இது உருவாகி இருக்கின்றது. கிலாஃபத்தின் 100 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி அவர்கள் 100 நபர்கள் கொண்ட குழுவை தயார் செய்துள்ளார்கள். இங்கு நான் ஒரு விஷயத்தை தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

இவ்விஷயத்தை முதன் முறையாக செயல்பட்டது ஆப்பிரிக்காவேயாகும். ஐரோப்பாவில் வசிப்பவர்களும் பெரும் தியாகங்களை செய்துள்ளார்கள். ஆனால், வரலாறு சரியாக இருக்க வேண்டும். நான் இவ்வாறு தெளிவுபடுத்துவதற்கு காரணம் மாநாட்டு நாட்களில் தற்செயலாக நான் MTA –வைப் பார்த்தேன். அதில் ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சி இருந்தது. அதில் ஒருவர் முதல் முறையாக இந்த அளவு எண்ணிக்கையில் மக்கள் சைக்கிளில் பயணம் செய்து மாநாட்டில் கலந்து கொண்டார்கள் என்று கூறினார். அவர் கூறியது முழு ஐரோப்பா அளவில் மட்டும் குறிப்பிடக்கூடியாக இருநால் அது சரியான தகவல்தான். ஆனால் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பேசிய ஷம்ஸ் சாஹிப் அவர்கள் கனடாவில் சைக்கிளில் பயணம் செய்தவர்களின் உதாரணத்யும் எடுத்துக்கூறி அஹ்மதிய்யத்தின் உலகில் இது முதல் முறையாக நடைபெற்ற சம்பவம் போன்று அதை குறிப்பிட்டுள்ளார். ஆனால் நான் அறிந்த வரை பாகிஸ்தானில் மாநாடுகள் நடைபெற்ற சமயத்தில் ஒரு பெரும் எண்ணிக்கையில் சைக்கிள் பயணிகள் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் கட்டளைக்கிணங்க சைக்கிளில் பயணம் செய்து மாநாட்டில் கலந்து கொண்டார்கள். எனவே, குத்தாம்கள் இப்போது தொடங்கியுள்ள இந்தப் பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டும். இன்றைய உலகத்தில் பெட்ரோல் குறைவாக இருக்கின்றது. இதனால் விலையேற்றம் ஏற்பட்டுள்ளது என்ற புலம்பல் இருந்து வரும் சமயத்தில் குறைந்தபட்சம் இளைஞர்களாவது இதிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். இது உடற்பயிற்சியாகவும் அமைகிறது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹின் இந்த திட்டத்தின் காரணமாக அந்தக் காலத்தில் நல்ல பலன் கிடைத்தது. எனக்கு நினைவில் இருக்கின்றது. நான் அந்த சமயத்தில் பைசலாபாத்தில் படித்துக் கொண்டிருந்தேன். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹின் இந்த திட்டத்தின் காரணமாக சைக்கிளில் பயணம் செய்யும் பழக்கம் எனக்கு இருந்தது. ஒருமுறை மாநாடு முடிந்ததும் பைசலாபாத்திற்கு செல்வதற்காக நான் பேருந்து நிலையத்திற்கு வந்தேன். அப்போது பேருந்தில் மிகவும்

கூட்டம் அதிகமாக இருந்தது. ரப்வாவின் மாநாடுகளை பார்த்தவர்களுக்கு இதுபற்றி தெரியும். என்னுடன் எனது நண்பர் ஒருவரும் இருந்தார். அரை மணி நேரம் பேருந்திற்காக காத்து நின்ற பிறகு இனி சைக்கிளில் நாம் செல்வதுதான் நல்லது என்று நான் எனது நண்பரிடம் கூறினேன். நாங்கள் இருவரும் வீட்டிற்கு வந்து சைக்கிளை எடுத்துக் கொண்டு இருவரும் சைக்கிளில் அமர்ந்து சுகமாக பைசலாபாத் வந்து சேர்ந்தோம். அடுத்த நாள் எனக்கு தேர்வு எழுத வேண்டியது இருந்தது. அல்லது ஏதோ ஒரு அவசர வேலை இருந்தது. முதலிலேயே இதற்கான பழக்கமும் பயிற்சியும் இல்லாமலிருந்தால் இரவு நேரத்தில் ஆறு மணி நேரம் பேருந்திற்காக காத்து நிற்க வேண்டியது வரும். எனவே, சைக்கிள் பயணத்தல் நல்ல பலன் கிடைக்கின்றது.

எவ்வாறிருப்பினும், இந்த வருடத்தில் கானா மாநாட்டிற்காக ஆப்பிரிக்காவில் உள்ளவர்கள்தான் இவ்விஷயத்தில் முதல் முறையாக செயல்பட்டுள்ளார்கள். புர்கினோஃபாஸோவிலிருந்து 300 குத்தாமின் குழு சைக்கிளில் கானா மாநாட்டிற்கு வந்தது. அவர்கள் 1600 அல்லது 1700 கிலோ மீட்டர் சைக்கிளில் பயணம் செய்துள்ளார்கள். ஜெர்மனியின் அமீர் சாஹிப் அவர்கள் நாங்கள் வந்த ரோடுகளில் கூட்டம் அதிகமாக இருந்தது என்று கூறி சைக்கிளில் வந்தவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை அவர்கள் செய்தார்கள். இது அவருடைய சிறந்த பணியாகும். ஆனால், புர்கினோஃபாஸோவிலுள்ள இளைஞர்கள் செய்தது மிகப்பெரிய பணியாகும். அங்கு அவர்கள் வந்த ரோடும் உடைந்த நிலையில் இருந்தது. சைக்கிலும் உடைந்திருந்தது. அங்குள்ள பத்திரிகைகள் இந்த உடைந்த நிலையில் இருக்கும் சைக்கிள்கள் சென்று சேர வேண்டிய இடம் வரை செல்லுமா? என்று செய்தி வெளியிட்டது. பிறகு எளிதாக அவர்களுக்கு உணவும் கிடைக்காத நிலை இருந்தது. அளவுக்கு அதிகமாக வெப்பமும் இருந்தது. இவை எல்லாவற்றையும் சேர்த்து பார்க்கும் போது அங்குள்ள இளைஞர்கள் மிகவும் தைரியமாக செயல்பட்டுள்ளார்கள்.

எனவே, முழு உலகிலும் இதற்கான போட்டி இருக்குமென்றால் கிலாஃபத் ஜூப்லி மாநாட்டிற்காக சைக்கிளில் பயணம் செய்தவர்களில் முதலாவது இடத்தை புர்கினோஃபாஸோவிலுள்ள குத்தாம் பெறுகின்றார்கள். ஆனால், சைக்கிளில் பயணம் செய்யும் இந்த வழக்கம் இனியும் தொடர்ந்து இருந்துவர வேண்டும். ஆப்பிரிக்கா, ஜெர்மனி ஆகிய சைக்கிள் பயணங்கள் மூலம் நல்ல பலன் கிடைத்துள்ளது. தப்லீகிற்கான வழிகளும் இதன் மூலம் திறந்திருக்கின்றது. ஜமாஅத்தின் அறிமுகமும் கிடைத்துள்ளது. ஜெர்மனியிலும் இந்த சைக்கிள் பயணம் ஆரம்பமாவதற்கு முன் மீடியா அதை coverage செய்தது. இங்கு வந்த பிறகும் மீடியா சைக்கிளில் பயணம் செய்தவர்களை நன்றாக coverage செய்தது. நிச்சயமாக இவை ஜமாஅத்தின் அறிமுகத்திற்கு காரணமாக இருந்தது. அல்லாஹ் ஜெர்மனியிலிருந்து வந்துள்ள இளைஞர்களின் மனத்தூய்மையையும் பற்றையும் அதிகமாக்குவானாக.

இன்று நாம் ஜமாஅத்தின் இளைஞர்களிடமும் சிறுவர்களிடமும் இத்தகைய தியாகங்களை பார்க்கும் போது இது அவர்கள் கிலாஃபத்தின் மீது வைத்துள்ள பற்றைத்தான் வெளிப்படுத்துகிறது. இறைவன் இவர்களை மனத்தூய்மையிலும் பற்றிலும் மேலும் முன்னேறும்படி செய்வானாக. இத்தகைய மனத்தூய்மையும், பற்றும் கட்டுப்படும் நிலையும் ஒரு சமுதாயத்தில் இருந்தால் அந்த சமுதாயத்தில் மிகப்பெரும் புரட்சி ஏற்படும் என்று மற்றவர்கள் நம்மைப் பார்த்துக் கூறுவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாக இருந்தாலும் இதனால் மற்றவர்களுக்கு பொறாமையும் ஏற்படுகின்றது. அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு நாம் அல்லாஹ்வின் அடைக்கலத்தின்கீழ் எல்லா நேரமும் இருந்து வருவதற்காக நாம் எப்போதும் அவன் முன்னால் குனிய வேண்டும். அல்லாஹ் ஒவ்வொரு தீங்கிலிருந்தும் ஒவ்வொரு அஹ்மதியையும் காப்பாற்றுவானாக.

இந்த எல்லா மாநாட்டு பணிகளும் ஏற்பாடுகளும் தன்னார்வத் தொண்டர்கள் (Volunteers) மூலமாகத்தான் நடக்கின்றது. பல்வேறு துறைகளில் இவர்களிடமிருந்து நாம் வேலை வாங்குகின்றோம். 35 அல்லது 40 துறைகள் ஆண்களிலும் இதே அளவு துறைகள் பெண்களிலும் இருக்கின்றது. இந்த துறைகளில் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கின்ற மொழிபெயர்ப்பு துறையும் இருக்கின்றது. இந்த மாநாட்டில் 2,500 பேர்களுக்கு பல்வேறு மொழிகளில் மாநாட்டு நிகழ்ச்சிகள் மொழிபெயர்த்து உடனடியாக கூறப்பட்டிருக்கின்றது.

இதை சுட்டிக்காட்டி நான் வக்ஃபே நவ் -ல் இருக்கும் சிறுவர்களிடமும், குறிப்பாக சிறுமிகளிடமும் அவர்கள் மொழிகளை கற்றுக் கொள்வதன் பக்கம் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன். ஏனென்றால், வருங்காலத்தில் இதன் தேவை அதிகமாக இருக்கும் இன்ஷா அல்லாஹ். இந்த தேவையை நிறைவு செய்ய நிரந்தரமாக இதற்கு வக்ஃப் செய்பவர்கள் தேவைப்படுவார்கள். பல்வேறு துறைகளில் தொண்டு செய்த பணியாளர்களில் முதியவர்கள், இளைஞர்கள் ஆகியவர்களின் எண்ணிக்கை 3,500 ஆகும். இவர்கள் மாநாட்டிற்காக தொண்டாற்றியவர்கள் ஆவர். பெண்கள், சிறுமிகள் ஆகியோரது எண்ணிக்கை 1800 ஆகும். எல்லாரும் திறந்த உள்ளத்துடனும் மகிழ்ச்சியுடனும் இந்த பணியை செய்துள்ளார்கள். இங்கு வந்த விருந்தாளிகளும் இவர்கள் அனைவருக்காகவும் துஆ செய்ய வேண்டும். இதை தவிர MTA -வில் பணிபுரியும் பணியாளர்களில் மாநாட்டுத் திடலில் பணிபுரிந்தவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 110 பேர் ஆகும். மொத்தம் 180 பணியாளர்கள் MTA -வில் பணிபுரிகின்றார்கள். இவர்கள்தான் வெளிநாடுகளில் உள்ள அஹ்மதிகளுக்கும் மாநாட்டை பார்ப்பதற்கான ஏற்பாட்டை செய்துள்ளார்கள். நன்றி தெரிவிக்கும் வகையில் உலகில் வாழும் எல்லா அஹ்மதிகளும் இவர்களுக்காக துஆ செய்ய வேண்டும்.

அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் நற்கூலியை வழங்குவானாக. இந்த வி-யங்கள் எப்போதும் நம்மை நன்றி செலுத்துபவர்களாக ஆக்க வேண்டும். மாநாட்டிற்காக பணியில் ஈடுபட்டவர்களுக்கு அல்லாஹ் எப்போதும் நன்மையிலும் தொண்டாற்றுவதிலும் அவர்கள் முன்னேறுதற்கான தஃவ்பீகை வழங்க துஆ செய்ய வேண்டும்.

எல்லாப் புறமும் -ய்த்தான் வழிகேட்டின் பக்கம் கொண்டு செல்வதற்கு முயற்சி செய்கின்ற இக்காலத்தில் அல்லாஹ் அஹ்மதிகளின் ஆன்மீக முன்னேற்றத்திற்காக ஏற்பாட்டை செய்துள்ளான்.

**நான் ஓதிய வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்.**

என்னை நீங்கள் நினைவு கூர்ந்து கொண்டிருங்கள். எனது கட்டளைக்கு ஏற்ப செயல்படுங்கள். பிறகு நானும் உங்களை நினைவில் வைப்பேன். நன்மைகளில் உங்களை முன்னேறச் செய்வேன் என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

நாம் இந்த மாநாடு மூலம் கற்றவற்றை நம்மிடம் செயல்படுத்துவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். ஷய்த்தானின் ஏமாற்றுதலுக்கு ஆளாகிவிடக் கூடாது.

ஒரு ஹதீஸில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்வதாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்த துஆவையும் நாம் எப்போதும் செய்து வர வேண்டும்.

என் இறைவா! உனக்கு நன்றி செலுத்துபவனாகவும் உன்னை நினைவு கூர்பவனாகவும் உனக்கு அஞ்சுபவனாகவும் உனக்கு முழுமையாக கட்டுப்படுபவனாகவும் உனது முன்னிலையில் பணிவை கடைபிடிப்பவனாகவும் நீ என்னை ஆக்குவாயாக என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது எஜமானனிடம் வேண்டியுள்ளார்கள்.

நமது துஆக்களில் இந்த துஆவிற்கும் மிகுந்த முக்கியத்துவத்தை வழங்கி நமது ஹக்கிலும் இந்த துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதை காண்பதற்கான தவ்ஃபீகை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. ஆமீன்.

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH, LONDON
ON 01.08.2008

Translated by : Maulavi M. Rafeeq Ahmad H.A
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456